

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு, மாசி மாதம் 11 ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் நாள் வியாழக்கிழமை**

**அதிகாரம் :** வாழ்க்கைத் துணைநலம் **- குறள் எண் : 53**

**குறள்**

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்

இல்லவள் மாணாக் கடை

**குறள் விளக்கம்**

நல்ல பண்புடைய மனைவி அமைந்த வாழ்க்கையில் எல்லாம் இருக்கும் அப்படியொரு மனைவி அமையாத வாழ்க்கையில் எதுவுமே இருக்காது.

பழமொழி ( Proverb )

***A young calf knows no fear***

இளங்கன்று பயமறியாது

பொன்மொழி

சிறந்த ஆசிரியர், சிறந்த நூல்கள் இரண்டும்தான் அறியாமையை நீக்கும் ஒரே வழி.

இரண்டொழுக்க உறுதி மொழி

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

இன்றைய பொது அறிவு வினா விடை

1. நியான் விளக்கை கண்டுபிடித்தவர்? ஐஸ்கிளாட்
2. சினிமாவை கண்டுபிடித்தவர்? நிகோலஸ் லுமியர்

தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

***What a lovely day !***

என்ன ஒரு அழகான நாள் !

***Where have you been?***

நீ எங்கே இருந்தாய்?



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

வரலாற்றில் இன்று :

- மெக்சிகோ கொடி நாள்
- தமிழக முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா பிறந்த தினம்(1948)
- நாசிக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது(1920)
- எஸ்தோனியா விடுதலையை அறிவித்தது(1918)
- கிரிகொரியன் நாட்காட்டி அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது(1582)

### இன்றைய செய்திகள்

*உத்திரபிரதேச மாநிலத்தில் நான்காம் கட்ட வாக்குப்பதிவு நேற்று நிறைவடைந்தது.

*சமூக வலைதளங்கள் மூலம் பொதுமக்கள், மாணவர்கள் உட்பட பல்வேறு தரப்பினர் விடுத்த கோரிக்கையை ஏற்று, மேலும் ஒரு வார காலத்திற்கு குடியரசு தின அலங்கார ஊர்திகள் காட்சிப்படுத்தப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

*தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) நடத்தும் குரூப் 2 மற்றும் குரூப் 2ஏ பதவிகளுக்கான தேர்வுக்கான அறிவிப்பை தேர்வாணையம் வெளியிட்டுள்ளது.

* தமிழ்நாட்டில் நேற்று 618 பேருக்கு கொரானா உறுதிசெய்யப்பட்டுள்ளது. 4 பேர் கொரானாவின் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளனர்.

*மதுரை மீனாட்சி அம்மன் கோவலில் உண்டியல் பணம் எண்ணும் பணி நேற்று தொடங்கியது. நேற்று 69 இலட்சம் வரை வருவாய் வந்துள்ளது என கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

*5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் வருகின்ற 27 ஆம் தேதி போலியோ சொட்டு வழங்கப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

* போலியோ சொட்டு மருந்து 47 இலட்சம் குழந்தைகளுக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

*உலக செஸ் சாம்பியன் கார்லசனை செஜ் போட்டியில் தமிழகத்தை சேர்ந்த சிறுவன் பிரக்ஞானந்தா தோற்கடித்துள்ளார். பிரதமர் மோடி அதற்கான வாழ்த்தை பிரக்ஞானந்தாவிற்கு தெரிவித்துள்ளார்.